மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2024-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், பங்குனி மாதம் 1-ஆம் நாள்.

**IA.No.262/2021**
**in**
**OS.No.13/2019**

ராஜசெல்வி ... மனுதாரர் / வாதி

**//எதிர்//**

1. ஜோதி (இறந்தார்)
2. ராஜசேகர்
3. இளங்கோவன் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்
4. மாலா
5. மாரியம்மாள் ... எதிர்மனுதாரர்கள் / LRs of the deceased 1st Defendant

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வரப்பெற்று, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. சம்பத்குமார், அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. ரவிச்சந்திரன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.. ..

**//உத்தரவு//**

இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஜோதி இறந்த தேதியான 19.04.2021 ம் தேதியிலிருந்து சட்டப்படியான 90 நாட்கள் காலக்கெடுவில் வாரிசுகள் சேர்க்க மனு தாக்கல்

செய்யப்படாததால் 1ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு (abate) அற்று போய்விட்டதை ரத்து செய்து வாரிசு மனுவை ஏற்றுக் கொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 9-ன் கீழ் மனுதாரர் / வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யும் மனுவின் சுருக்கம்

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது பிரதிவாதிகள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி ஜோதி கடந்த 19.04.2021 ம் தேதியன்று இறந்துவிட்டார். மேற்படி 1ம் பிரதிவாதி ஜோதி இறந்த தேதியான 19.04.2021 ம் தேதியிலிருந்து சட்டப்படியான 90 நாட்கள் காலக்கெடுவில் வாரிசுகள் சேர்க்க மனு தாக்கல் செய்யப்படாததால் 1ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு (abate) அற்று போய்விட்டது. மேற்படி 1ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகளாக சேர்ப்பதற்கு மனு கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மனுவை அனுமதிப்பதால் பிரதிவாதியின் வாரிசுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக் கூடியதில்லை. மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் தன்மை மாறக்கூடியதில்லை. எனவே, இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஜோதி இறந்த தேதியான 19.04.2021 ம் தேதியிலிருந்து சட்டப்படியான 90 நாட்கள் காலக்கெடுவில் வாரிசுகள் சேர்க்க மனு தாக்கல் செய்யப்படாததால் 1ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு (abate) அற்று போய்விட்டதை ரத்து செய்து வாரிசு மனுவை ஏற்றுக் கொள்ள உத்தரவாக வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>**2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:-**</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படியும், நியாயபடியும் நிலைநிற்க கூடியதல்ல, எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யபட வேண்டியதாக உள்ளது. மேற்படி வழக்கில் கண்டுள்ள 1ம் பிரதிவாதியான ஜோதி என்பவர் கடந்த 19.04.2021 ம் தேதியன்று காலமாகிவிட்டார். மேற்படி 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை 1ம் பிரதிவாதி இறந்த 19.04.2021 லிருந்து காலவரையறை சட்டப்படி 90 நாட்களுக்குள் அதாவது 19.07.2021 க்குள் சேர்க்க மனுதாரர்/வாதி மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். மேற்படி 90 நாட்களுக்குள் வாரிசு மனு தாக்கல் செய்யாததால் மேற்படி வழக்கானது abate ஆகிவிட்டது.

அவ்வாறு காலதாமதமாக தாக்கல் செய்வதற்கு மனுதாரர்/வாதி தரப்பில் காலதாமதத்தை மன்னிக்க உரிய காரணங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. உரிய காரணங்கள் சொல்லாமல் abate ஐ ரத்து செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது சட்டப்படி நிலைநிற்க தகுந்ததல்ல என்றும், மனுதாரர்/வாதி தரப்பில் abate ஐ ரத்து செய்வதற்கு முறையான சரியான காரணங்கள் எதுவும் சொல்லப்படாததாலும், மனுதாரர்/வாதி தரப்பில் காலத்தை கடத்த வேண்டும் என்ற தீய எண்ணத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறி எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. **இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

<u>**தீர்வு :-**</u>

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** அசல் வழக்கானது தாவா சொத்தில் வாதிக்குள்ள அனுபோகத்தினை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எந்தகாலத்திலும், எந்தவிதத்திலும் அத்துமீறி ஆக்கிரமித்து தடைதகராறுகள் செயயக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப்பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, இருதரப்பு வாதத்திற்காக போடப்பட்டிருந்தபோது 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.**இம்மனுவினை பரிசீலிக்கும் போது, 1ம் பிரதிவாதி ஜோதி கடந்த 19.04.2021 ம் தேதியன்று இறந்துவிட்டதால் 90 நாட்களுக்குள் வாரிசுகள் சேர்க்காததால் வழக்கு (abate) அற்று போய்விட்டதை ரத்து செய்து வாரிசு மனுவினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளபோதும், மனுவில் கண்டுள்ள நபர்களை வழக்கில் சேர்ப்பதால் வழக்கின் தன்மை மாறாது என்பதாலும் வாதி தரப்பு வாதத்தை நிரூபிக்கும் விதமாக இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவது இல்லை என்பதாலும், நிபந்தனையுடன் அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்வுக்காண்கிறது.

**முடிவில்,** மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ. 500/-ஐ எதிர்வரும் 01.04.2024 ம் தேதிக்குள் செலுத்தி வைக்கவேண்டும் என்று இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால்

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 14.03.2024) அவையறியப்பகரப்பட்டது.

(S/d. A.Seethalakshmi),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(முகூபொ)

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

**இரு தரப்பிலும்** : இல்லை

(S/d. A.Seethalakshmi),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி. (முகூபொ)